# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • டிசம்பர் 7, 2019 Weekly E-paper • December 7, 2019




# குற்றமும் தண்டனையும்

சுப. வீரபாண்டியன்

## பொது விநியோகத்தில் அநியாயம்

மா.உதயகுமார்

## கண்ணீரில் வெங்காயம்

தலையங்கம்

## தீண்டாமைச் சுவர்

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • டிசம்பர் 7, 2019

Weekly E-paper • December 7, 2019

# குற்றமும் தண்டனையும்

• சுப. வீரபாண்டியன்

ஹைதராபாத்தில் பெண் மருத்துவர் பிரியங்கா, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, மிகக் கொடுமையான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர்கள், ஒரு வாரத்திற்குள், காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். காவலர்கள் கொடுத்துள்ள இந்தத் தண்டனையை மக்கள் கொண்டாடுகின்றனர்.



பொள்ளாச்சியில், இதனை விடக் கொடுமையான குற்றங்கள் நடைபெற்றுள்ளன. இன்றுவரையில் எவரும் தண்டிக்கப்படவில்லை. முறையான விசாரணைகள் கூட நடைபெறவில்லை. இதற்காக மக்கள் கோபம் கொண்டு கொந்தளிக்கவுமில்லை.

2012 ஆம் ஆண்டு ஓடும் வண்டியில் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட நிர்பயா வழக்கு நடைபெற்று முடிந்துள்ளது. தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

மூன்று வழக்குகளும் அடிப்படையில் ஒரே மாதிரியானவை. ஆனால், தீர்க்கப்படும் விதமோ முற்றிலும் வேறானவை.

விசாரணைக் கைதிகள் தப்பியோட முயன்றபோதும், தங்களையே தாக்க முயன்றபோதும், வேறு வழியின்றி அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டோம் என்பது, காலகாலமாகக் காவல்துறை கூறும் காரணம். மக்களுக்கும் இது தெரியும். இந்தக் கூற்றை யாருமே நம்புவதில்லை. ஆனாலும், இதனை மக்கள் இன்று கொண்டாடுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று, தவறுகள் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று மக்கள் கருதுகின்றனர். நீதிமன்ற நடவடிக்கைகள் மிக மிகக் காலம் தாழ்த்தக்கூடியவை என்பதும், தாமதிக்கப்பட்ட நீதியாகவே அது இருக்கும் என்பதும் பொதுவான கருத்து. காலத் தாழ்வு ஏற்படும்போது குற்றவாளிகள் பலர் தப்பித்து விடுகின்றனர் என்பதும் பொதுவான எண்ணம். எனவே உடனடியாக வழங்கப்படும் தண்டனை, மக்களால் வரவேற்கப்படுகிறது.

இரண்டாவது காரணம், இப்படிக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டால்தான், அடுத்து இதுபோன்ற கொடுமையான தவறுகள் தடுக்கப்படும் என்ற நம்பிக்கை. இந்த இரண்டு காரணங்களின் அடிப்படையில் மக்கள் இது போன்ற நிகழ்வுகளை வரவேற்பது இயற்கை. பெரிய அரசியல் கட்சிகளும், மக்களின் பொதுவான கருத்துகளோடு இயைந்து செல்ல வேண்டியவர்களாகவே உள்ளனர்.

இருப்பினும், சட்டத்தின் ஆட்சியிலும், ஜனநாயகத்திலும் நம்பிக்கை உள்ளவர்கள், நீதிமன்ற நடைமுறையில் உள்ள குறைபாடுகளை அறிந்திருந்த போதிலும், இவ்வகையான தண்டனைகளை ஏற்க முடியாது. இது மிகப் பெரிய மோசமான முன்மாதிரியாக அமைந்துவிடும். தங்களுக்கு வேண்டாதவர்களைச் சுட்டுக் கொல்ல அரசாங்கமும், காவல்துறையும் இந்த வழியைத் தொடர்ந்து பின்பற்ற முயல்வார்கள். அதற்குப் பிறகு, சட்டம், நீதிமன்றம் எல்லாம் வெறும் கேலிக்கூத்துகளாகத்தான் ஆகிவிடும்.

நீதிமன்ற நடவடிக்கைகளில் இருக்கும் குறைபாடுகளைக் களைய வேண்டியது மிகவும் தேவையான ஒன்றுதான். நேர்மையும், விரைவும் நீதிமன்றத்தின் அடிப்படைக் குணங்களாக இருந்தால்தான், மக்கள் அவற்றை நம்புவார்கள். இல்லையெனில், கருப்பு அங்கிகளின் இடத்தைக் காக்கிச் சட்டைகள் மிக எளிதில் பிடித்துக் கொள்ளும். அந்தப் புதிய ஆபத்து, பழைய ஆபத்தை விடவும் கூடுதல் கேடுகளை விளைவிக்கும். ●



# பொது விநியோகத்தில் ஒரு புது அநியாயம்

● - மா.உதயகுமார்



1967 ஆம் ஆண்டே ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி எனும் வாக்குறுதி கொடுத்துத் தொடங்கிய திராவிட இயக்க ஆட்சி, இன்று இலவச அரிசி வழங்குவது வரை பொது விநியோகத் திட்டத்தில் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குச் சிறந்து விளங்கி வருகிறது. இதனை அனைத்துப் பொருளாதார அறிஞர்களும் எடுத்துரைத்திருக்கின்றனர். பொருளாதார அறிஞரும் நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்தியா சென் *“An Uncertain Glory - India and its Contradictions”* என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*“One of the pioneer states, here as in many other fields (as we have observed), was Tamil Nadu, where the PDS is universal, regular and relatively corruption free.” (பக்கம் 206)*

மற்ற எல்லா துறைகளிலும் முன்னோடியாக விளங்குவது போலவே பொது விநியோக முறையிலும் தமிழ்நாடு முன்னோடியாக விளங்கி வருகிறது. இங்கு பொது விநியோகத் திட்டம் என்பது அனைவருக்கும் பரவலாக்கப்பட்டதாகவும், முறையாகவும், ஒப்பீட்டளவில் ஊழல் அற்றதாகவும் இருக்கிறது.

இப்படிப்பட்ட வளர்ச்சியை முடக்கும் செயலாக “ஒரே நாடு ஒரே ரேஷன்” என்ற திட்டத்தைக் கொண்டு வருவதாக அண்மையில் மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் யார் பயன்பெறப் போகிறார்கள்? எதற்காக இந்த நாட்டு மக்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்குக் குடிபெயர்ந்து கொண்டே இருக்க வேண்டும்? அப்படிக் குடிபெயர்கிறவர்கள் அந்த மாநிலத்தில் குடும்ப அட்டை வாங்கிக்கொள்ளப்போகிறார்கள். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாநிலத்தில் குடியேறப் போகிறார்களா இந்நாட்டு மக்கள்? இப்படிப்பட்ட திட்டமே தேவையற்றது.

பொதுவாக எல்லா நாடுகளிலும் மையப்படுத்தப்பட்ட திட்டங்களைப் பரவலாக்கி அது அனைவருக்கும் சென்று சேரும் விதமாக மாற்றி வருகிறார்கள். ஆனால் இந்தியாவில் மட்டும்தான் பரவலாக்கப்பட்டு மக்கள் பயன்பெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்களை மீண்டும் மக்களிடம் இருந்து பறித்து அரசு எடுத்துக்கொள்கிறது, இது ஒருபோதும் வளர்ச்சிக்கு உதவாது. நாட்டின் வளர்ச்சியில் உண்மையிலேயே இவர்கள் அக்கறை கொண்டிருந்தால் இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டி இருக்க மாட்டார்கள். அவர்களுக்குத் தேவை நாட்டின் வளர்ச்சி அல்ல இந்துத்துவத்தின் வளர்ச்சி.

எதற்காக இவர்கள் ‘ஒரே நாடு ஒரே வரி’, ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’, ‘ஒரே நாடு ஒரே ரேஷன்’, ‘ஒரே நாடு ஒரே தேர்வு’ போன்றவற்றைக் கொண்டு வரவேண்டும்.? ஆர்எஸ்எஸ்-பாஜகவின் செயல்திட்டம் என்பது மதச்சார்பற்ற இந்த நாட்டை இந்துத்துவ நாடாக மாற்றுவது. ஆனால் நடைமுறையில் அது மக்களை இந்துக்களாக ஒன்றிணைப்பதாக இல்லை. ஏனெனில் இந்து மதமே பார்ப்பனர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புதானே. இங்குள்ள பல்வேறு தரப்பட்ட மக்களையும் இந்துமயமாக்கவும் மக்கள் அனைவருக்கும் காவிச் சாயம் பூசவுமே இது போன்ற ஒற்றைக் கலாச்சார முறையை உருவாக்குகிறார்கள். இவர்கள் மக்களை எல்லாம் இந்துக்கள் என்றும், ஒரே நாடு என்றும் ஒருங்கிணைப்பது அவர்களை அவரவர் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றில் இருந்து விலக்கி ஒற்றைக் கலாச்சாரத்தை ஒரே மொழியைத் திணிப்பதற்காகவே. ஆனால் சாதிகளாக மக்களை அப்படியே பிரித்து வைக்கத்தான் இத்தனை ஒருங்கிணைப்பும் என்பதைச் சூத்திரர்கள் உணர வேண்டும்.

இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்து இன்னும் ஓராண்டு கூட நிறைவடையாத நிலையில் ஒரு நூற்றாண்டாகப் போராடிப் பெற்ற உரிமைகளையும் வளர்ச்சியையும் அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா போன்ற மக்கள்தொகை அதிகம் கொண்ட நாடுகளில் இதுபோன்ற மையப்படுத்தப்பட்ட திட்டங்கள் எல்லாம் தோல்வியையே சந்திக்கும். மேலும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு இது எதிரானதாகும். அந்தந்த மாநில மக்களின் உரிமைகளைப் பறிப்பதோடு சுரண்டலுக்கும் வழிவகுக்கும். இங்கே சுரண்டப்படுவது வளர்ச்சியடைந்த தென் மாநிலங்கள் அதுவும் குறிப்பாகத் தமிழ்நாடாகவும், சுரண்டுபவர்கள் வட மாநிலத்தவர்களாகவுமே வழக்கம் போல் இருப்பார்கள்.

சித்தம் தடுமாறியவர்களுக்கு ஒரு பொருள் பலவாறாகத் தெரியும். ஆனால் இங்கே சித்தம் தடுமாறிய இவர்களுக்குப் பல பொருள்கள் ஒன்றாகத் தெரிகின்றன. இவர்கள் பன்மைத்துவத்தை ஒற்றைத் தன்மையானதாகப் பார்க்கும் அந்தப் பார்வையில் ஒளிந்திருப்பது நயவஞ்சகமும் சூழ்ச்சியுமே ஆகும். இந்தச் சூழ்ச்சிகளால் இங்கே அவர்கள் நிலைநாட்ட விரும்புவது பார்ப்பன ஆதிக்கத்தையே ஆகும்.

இன்று “ஒரு நாடு ஒரு ரேஷன்” என்று சொல்பவர்கள் நாளை “ஒரு நாடு ஒரே உணவு” என்றும் சொல்லத் தொடங்குவார்கள். வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணம் செலுத்தப்படும் என்றும் சொல்லப்படும். பொருளாகக் கொடுக்கும் போதுதான் அது பசியால் வாடும் மக்களுக்குப் பயன்படும். வங்கியில் செலுத்தப்படும் பணத்தை வைத்துக் கொண்டு சந்தையில் அதிக விலைக்கு விற்கப்படும் பொருள்களை அவர்கள் எப்படி வாங்க முடியும். இன்னும் சில நாள்களில் இந்தப் பொது விநியோக முறையே இல்லாத வகையில் தனியாருக்கு அதனை ஒப்படைத்துப் பின்னர் நீர்த்துப் போகச் செய்து ஒழித்துக் கட்டி விடுவார்கள்.

பசியால் வாடுபவர்களுக்கு அரிசி விநியோகம் செய்வதற்காக அல்ல, பார்ப்பனர்களுக்கு அதிகாரத்தை விநியோகம் செய்யவே “ஒரே நாடு ஒரே ரேஷன்” திட்டம். ●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## இராணிப்பேட்டை




5-12-2019 அன்று இராணிப்பேட்டை சி.எஸ்.ஐ பள்ளியில் நடைபெற்ற விழாவில் தோழர் சுப.வீரபாண்டியன் உரையாற்றினார். தோழர்கள் சிங்கராயர், பெல் ராஜன், ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பேரவையில் இணைந்தவர்கள்



28-11-2019 அன்று மென்பொறியாளர்கள் ஹரிகரன், பார்த்தசாரதி ஆகியோர் பேரவையில், பொதுச்செயலாளர் முன்னிலையில் உறுப்பினர்களாகத் தங்களை இணைத்துக் கொண்டனர்.

## பொதுச்செயலாளருடன் சந்திப்பு



28-11-2019 அன்று, முன்னாள் வங்கி மேலாளர் திரு சாரதாதேவி பேரவையில் உறுப்பினராக இணைந்தார். புதிய உறுப்பினர்கள் அமைப்பில் இணைந்த வேளையில், தோழர்கள் உமாபதி, எட்வின் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வெங்காயம்!



சிரித்தாலும் கண்ணீர் வரும். அழுதாலும் கண்ணீர் வரும். வெங்காயத்தை உரித்தாலும் கண்ணீர் வரும்.

தந்தை பெரியார் அவர்கள் அவரின் பேச்சின்போது வெங்காயம் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துவார். வெங்காயத்தை உரிக்க உரிக்க ஒன்றும் இல்லை என்றும் சொல்வார்கள்.ஆனால், வெங்காயம் மருத்துவ குணம் கொண்ட ஒரு நல்ல உணவுப் பொருள்.

ஒரு கிலோ வெங்காயம் 15 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலை மாறி சட்டென்று இன்று 200 முதல் 230 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

சாதாரணமாக, சோறு தவிர ஏனைய அனைத்து உணவுகளிலும் வெங்காயம் கட்டாயமாகப் பயன்படுத்தப் படும் ஒரு பொருள்.

உலக அளவில் வெங்காய உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாமிடத்திலும் இருக்கிறது. ஆனால், இன்றைய நிலையில் வெங்காயம் மக்கள் பெறமுடியாத அளவுக்குப் போய்விட்டது.

இன்னும் ஒரு மாதத்தில் வர இருக்கும் பொங்கல் திருநாளில் பயன்படுத்த வேண்டிய வெங்காயம், அந்த நேரத்தில் கிடைக்காமல் போகக் கூடிய நிலையே ஏற்படும் என்று தெரிகிறது. வெங்காயம் மட்டுமல்ல. காய்ந்த மிளகாய், வெள்ளைப் பூண்டு மற்றும் சில பருப்பு வகைகளின் விலையும் தாறுமாறாக உயர்ந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய வெங்காயம் உள்ளிட்ட உணவுப் பொருள்கள், அதன் கட்டுப்பாட்டை மீறிப் போய்விட்டது என்பதோடு, இது பதுக்கல்காரர்களுக்கும் வாய்ப்பாக அமைந்துவிட்டது.

இதுகுறித்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது, மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் “நான் அதிக அளவில் வெங்காயம், பூண்டு சாப்பிடுவதில்லை. நான் அதிகம் வெங்காயம் பயன்படுத்தாத குடும்பத்தில் இருந்து வந்தவள்” என்றார்.

நாளந்தா பல்கலைக் கழகத்தில் இருந்த மகாயான பவுத்த துறவிகள் யாரும் வெங்காயம், வெள்ளைப் பூண்டு சாப்பிடுவதில்லை. ஏனென்றால் அது தாழ்ந்தவர்களுக்கான உணவு என்பதால்தான் என்று யுவாங் சுவாங் தன் பயணக்குறிப்பில் கூறி இருக்கிறார்.

இங்கே, நிர்மலா சீதாராமன் பேச்சுக்கும், யுவாங் சுவாங் குறிப்புக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் காணலாம். இதுதான் பார்ப்பனியம்.

இது ஒருபுறமிருக்க சென்னை கோயம்பேட்டிற்கு நாள் ஒன்றுக்கு வந்த 80 வெங்காய லாரிகள் இப்பொழுது 35இலிருந்து 40ஆகக் குறைந்துவிட்டன.

இதுகுறித்து எந்தக் கவலையும் இல்லாமல் எடப்பாடி அரசு தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யாத எந்த ஒரு அரசும் மக்களுக்கான அரசு இல்லை.

மத்திய, மாநில அரசுகள் உரிக்க உரிக்க ஒன்றுமில்லாத வெங்காயங்கள்தான்.

# தீண்டாமைச் சுவர் – 17 பேர் கொலை

● வழக்கறிஞர் இராம.வைரமுத்து



மேட்டுப்பாளையம் நடூர் ஏடி காலனி கண்ணப்பன் நகர் பகுதியில் கனமழை காரணமாக 02.12.2019 அன்று தீண்டாமைச் சுவர் இடிந்து விழுந்தது.

அதன் அருகில் உள்ள நான்கு வீடுகளில் வசித்த ஆனந்தன் (38), நதியா (35), மகன் லோகராம் (10), அட்சயா (6), அறுக்கானி (40), ஹரிசுதா (19), மகாலட்சுமி (10), சின்னம்மாள் (60), ரூக்குமணி (42), திலகவதி (38), பழனிசாமி மனைவி சிவகாமி (38), வைதேகி (22), நிவேதா (20), ராமநாதன் (17), குருசாமி (35), ராமசாமி மனைவி ஏபியம்மாள் (70), மங்கம்மாள் (70) ஆகிய 17 பேர் பலியானார்கள். இந்தக் கோர சம்பவத்தை மழையின் காரணமாக ஏற்பட்ட விபத்து என்ற அளவில் நாம் கடந்து சென்று விட முடியாது.

இந்த விபத்திற்குக் காரணமான சுவர் சாதாரணச் சுவர் அன்று. அது தீண்டாமைச் சுவர். அது இடத்தின் உரிமையாளருக்குச் சொந்தமான இடம். அதில் கட்டுவது எப்படித் தீண்டாமைச் சுவர் ஆகும் என்று சிலர் கேட்கலாம். அந்த இடத்தின் உரிமையாளர் நான்கு பக்கமும் சுவர் எழுப்பியுள்ளார். ஆனால், மூன்று பக்கங்களில் உள்ள சுவரின் உயரம் சுமார் 8 அடிகள். தற்போது விழுந்து பலரைப் பலியாக்கியுள்ள சுவரோ 20 அடி உயரம். அந்தச் சுவரின் நீளம் 80 அடி. மற்ற மூன்று பக்கங்களிலும் தலித் அல்லாதவர்கள் இருப்பதால் உயரமான சுவர் இல்லை. ஆனால், அருந்ததியர் இருக்கும் திசையில் மட்டும் 20 அடி உயரச் சுவர். அருந்ததியரையும் அவர்களின் வீடுகளையும் கூடக் காணக் கூடாது என்கிற தீண்டாமை மனப்போக்கையே இது காட்டுகிறது.

உரிய பாதுகாப்பு இல்லாமல் கட்டப்பட்டுள்ள இந்தச் சுவர் ஆபத்து விளைவிக்கும் என்று அப்பகுதி மக்கள், அரசு அதிகாரிகளிடம் கோரிக்கை மனுக்கள் கொடுத்துள்ளார்கள். விதிமுறைகளை மீறிக் கட்டப்பட்ட இந்தச் சுவரை அகற்ற, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரோ, மாவட்ட நிர்வாகமோ, அதிகாரிகளோ எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலம் கடத்தி இருக்கின்றனர்.

இடத்தின் உரிமையாளரின் ஆணவமும் அதைக் கண்டு கொள்ளாத அரசின் அலட்சியமும்தான் இந்த 17 உயிர்கள் பலியானதற்கு உண்மையான காரணம். பலியான 17 பேரின் உடல்கள் உடற்கூறாய்வுக்காக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தடுக்கும் பொருட்டு உடல்களைக் கோவை அரசு மருத்துவமனைக்கு மாற்ற முயற்சித்தனர். இருப்பினும் மக்கள் போராடியதன் விளைவாக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையிலேயே உடற்கூறாய்வு நடத்தப்பட்டது. கொட்டும் மழையில் மருத்துவமனை வளாகத்தில் உடல்கள் கிடத்தப்பட்டு இருந்தன. அத்துடன் உடல்களை உடனே பெற்று எரியூட்டி விட வேண்டுமென்று காவல்துறையினர் மிரட்டியதால் சுடுகாட்டில் ஒரே நேரத்தில் ஆங்காங்கே 17 உடல்களை எரித்த அவலமும் அங்கு அரங்கேறியது. இதை எல்லாம் பார்க்கும் போது தாழ்த்தப்பட்ட அருந்ததியர் மக்களின் உயிருக்கும், உயிரற்ற உடலுக்கும்கூட இங்கு மரியாதை இல்லை என்பது புலனாகிறது.

இந்தத் துயரத்திற்குக் காரணமான இடத்தின் உரிமையாளரைக் கைது செய்ய வேண்டும் என்று சமூக நீதிக்காகப் போராடிய திராவிடத் தமிழர் கட்சியின் தலைவர் தோழர் வெண்மணி, தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் தோழர் நாகை திருவள்ளுவன் உள்பட 50க்கும் மேற்பட்ட தோழர்களைக் கடுமையாகத் தாக்கிச் சிறைப் படுத்தியுள்ளது காவல்துறை. குற்றவாளியைக் கைது செய்யாமல், போராடும் தோழர்களைக் கைது செய்த அட்டூழியத்தைக் கண்டிக்க ஊடகங்களுக்கு முதுகெலும்பு இல்லை.

தி.மு.க தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி அவர்களது கோரிக்கைகளை வலியுறுத்திய பிறகுதான் அந்த இடத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு உள்ளார். தளபதி மு.க.ஸ்டாலின் வந்து சென்றதால் தானும் வர வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி முதல்வர் எடப்பாடியும் வந்து சென்றார். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு இருந்த ரூ. 4 லட்சம் இழப்பீட்டுத் தொகை ரூ. 10 லட்சம் என்று உயர்த்தப்பட்டதுடன் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கவும், தகுதியுள்ள நபருக்கு அரசு வேலை அளிக்கவும் முதல்வர் உறுதியளித்தார்.

இந்தக் கோர சம்பவத்தில் பலியான நிவேதா மற்றும் ராமநாதன் ஆகியோரின் தந்தை செல்வராஜ் “எல்லாத்தையும் இழந்துட்டேன், இனி எதுவுமில்லை” என்று கூறித் தனது இரண்டு பிள்ளைகளின் கண்களைத் தானமாக வழங்கினார். அதே போல் தந்தையை இழந்த ஒரு சிறுமி கண்ணீர் நிறைந்த கண்களுடன் “நான் ஐந்தாம் வகுப்பு படிக்கிறேன். எங்கப்பாதான் மேல போயிட்டாரு, எனக்கு புக்கும் நோட்டும் துணிமணியும் கொடுத்தீங்கனா எங்க அம்மாவ காப்பாத்தி விட்டிருவேன்” என்று தொலைக்காட்சிகளில் பேட்டியளித்தார். சாதியைக் காட்டி இந்தச் சமுதாயம் தங்களை ஒதுக்கினாலும் தங்களது செயலால் இவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்.

நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடிய தலைவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டுக் காட்டுமிராண்டித்தனமாகக் காவல்துறையினரால் அடித்து இழுத்துச் செல்லப்படுகிறார்கள். உயர் நீதிமன்றத்தை "மயிர்" என்று கேவலப்படுத்திய எச். இராஜா, பெண் பத்திரிக்கையாளர்களின் நடத்தை குறித்து ஆபாசமாகக் கருத்துத் தெரிவித்த எஸ்.வி.சேகர் போன்றோர் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கிய காவல்துறை, உரிமைக்காகப் போராடிய தோழர்களின் மீது மட்டும் பாய்ந்ததற்குக் காரணம் சாதியைத் தவிர வேறொன்றும் இல்லை.

எனவே 17 பேர் பலியானதற்கு நீதி கேட்டுப் போராடிய தலைவர்களை விடுதலை செய்வதுடன் அவர்களின் மீது பதியப்பட்ட வழக்குகளையும் இரத்து செய்ய வேண்டும். அப்பகுதி மக்கள் பல முறை புகார் கூறியும் இந்தச் சுவரை அகற்றுவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்காத அரசு அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கைது செய்யப்பட்டுள்ள இடத்தின் உரிமையாளரின் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கொலை வழக்குப் பதிவு செய்து சரியான தண்டனை பெற்றுத் தர, அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்பது சத்தியமா, இல்லை வெறும் சம்பிரதாயமா என்பதை அரசின் நடவடிக்கைகளைப் பொறுத்தே மக்கள் நம்புவார்கள். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,